## அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழு

### கல்வி அமைச்சு

### இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் I இற்குரிய உத்தியோகத்தர்களை மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதிவிகளுக்காக நியமித்தல் - 2024

பின்வரும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுவதுடன், அவ்வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக தகைமையுடைய உத்தியோகத்தர்களிடம் இருந்து நாடளாவிய ரீதியில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

1. கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்
2. சப்ரகமுவ மாகாணக் கல்விப் பணிப்பாளர்

**02. தகைமைகள்**

I. இலங்கை கல்வி நிர்வாக சேவையில் தரம் I இல் 5 வருடங்களுக்கும் குறையாத திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்ட உத்தியோகராக இருத்தல்
II. இ.க.நி.சே. தரம் 1 இற்கு உயர்வு பெற்றதன் பின்னர் முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்
III. சகல தகைமைகளையும் விண்ணப்பங்கள பொறுப்பேற்கப்படும் இறுதி தினத்தன்று அல்லது அதற்கு முன்னதாக பூர்த்தி செய்திருத்தல் .

**03. விண்ணப்பங்கள் முன்னிலைப்படுத்த வேண்டிய விதம்**

I. இத்துடன் காட்டப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கமைவாக A4 அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை முறையாக பூர்த்தி செய்து 2024.07.09 ஆம் திகதியில் அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கும்படி **"உதவிச் செயலாளர், கல்விச்சேவை தாபனக் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல"** என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பவேண்டும்.

II. விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கான கோரிக்கை"** என குறிப்பிடப்பட வேண்டும். தாமதமாக கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

III. நீங்கள் அண்மையில் பெற்றுக் கொள்ளப்பட்ட $2x2^1/_2$" அளவிலான வர்ண புகைப்படம் ஒன்றை விண்ணப்பப்படிவத்தின் வலதுபக்க மேல் மூலையில் ஒட்டப்பட்டு அனுப்ப வேண்டும்.

04. முறைமை

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச்சேவைக் குழுவினால் நியமிக்கப்படுகின்ற மூன்று உறுப்பினர்களைக் கொண்ட நேர்முகத் தேர்வுக்குழுவொன்றின் பரிந்துரையின் அடிப்படையில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும். (மாகாண ஆளுநரால் பெயரிடப்படும் பிரதிநிதி ஒருவரும் இதில் உள்ளடங்குவார்)

05. உரிய கட்டமைப்பைக் கொண்ட நேர்முகத்தேர்வு பத்தரமுல்ல, இசுருபாய, கல்வி அமைச்சில் நடைபெறும். நேர்முகத்தேர்வு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். இந்த பதவிகளுக்கு நியமிப்பது தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழுவின் முடிவு இறுதி முடிவாகும்.

06. சிங்களம், மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் அறிவித்தலில் மொழிகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் இருப்பின் சிங்கள மொழிமூல அறிவிப்பு சரியானதென கருதி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழுவின் உத்தரவின் படி

ஜே.எம். திலகா ஜயசுந்தர
செயலாளர்
கல்வி அமைச்சு

2024.06. 18